ப்ரம்மவித்யா.

௩-ம் புத்தகம்

பத்திரிகாக்கிரயம்
1 வருஷம் 2—12—0
6 மாதம் 1—8—0
3 மாதம் 0—14—0
1 பிரதி 0—2—6
இலங்கைக்கு 3—8—0.

ப்ரம்மவித்தியாபத்திரிகை
மாதம் இருமுறை பிரசுரஞ் செய்யப்படும்

BRAHMAVIDYAPATHRIKA.

௨௩-ம் இலக்கம்

பத்திராகிரயத்தைமணியார்டராக வாவது ரூ. 1-க்கு அணா 1. சேர்த்து தபால்லேபிலாகவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியாப்ரெஸ்மானேஜருக்கு அனுப்புதல்வேண்டும்.

[illegible]

சிதம்பரம்:— கஅஅகூ௵ மேமீ ௧௫௳ விரோதி௵ வைகாசிமீ ௪௳

[illegible]

[illegible]

—:o:—

[illegible]

ஆரியாசாரம்.

முன் தொடர்பு.

சந்தியாவந்தன விதி.

இனிச் சந்தியோபாசனத்தைப்பற்றிக் கூறுவாம். மூன்று வருணத்தவர் மூவருக்கும் பற்பல கன்மங்கள் விதிக்கப்பட்டிருப்பினும் அவற்றுள் சந்தியாவந்தனமென்னுங் கருமமே எல்லாவற்றினுஞ் சிறப்புற்றது. "காலையில் நக்ஷத்திரங்கள் நன்றாகத்தோன்றும்பொழுதே விதிவழுவாது சந்தியவந்தனம் செயல்வேண்டும். சூரியமண்டலம் பாதி மறைந்திருக்கும் பொழுது மாலையில் சந்தியாவந்தனஞ்செய்தல்வேண்டும்" என் [illegible]சட்வர்த்தர் மொழிகின்றார். "காலையிற் செய்யும் சந்தியாவந்தனமாவது நக்ஷத்திரங்கள் புலப்படுங்கால் செய்யின் உத்தமமென்றும், அவை சிறிது மறைந்திருக்குங்கால் செய்தால் மத்திமமென்றும், சூரியனைக் கண்டபிறகு செய்தால் அதமமென்றும் ஆக மூவகைப்படும். மாலையிற் சந்தியாவந்தனம் சூரியன் புலப்படுங்கால் உத்தமமென்றும், சிற்சில நக்ஷத்திரங்கள் தோன்றுங்கால் மத்திமமென்றும், நக்ஷத்திரங்கள் முற்றிலும் வெளிப்படுங்கால் அதமமென்றும் ஆக மூவகைப்படு" மென்றும் வியாசாசாரியர் சாற்றுகின்றார். உதயத்திற்குமுன் இரண்டு நாழிகைகள் சந்தியாவந்தனத்திற்கு முக்கியகாலம். உதயத்திற்குப்பின் மூன்றேமுக்கால் நாழிகைவரையில் மத்தியகாலம். அதுகொண்டே ஓர் ஸ்மிருதியில் "உதயத்திற்குமுன் இரண்டுநாழிகைகளும் பின் மூன்றேமுக்கால் நாழிகைகளும் சந்தியாவந்தனத்திற்குக்கால" மென்று இருக்கின்றது. முக்கியகாலத்திற்றான் சந்தியை அநுட்டித்தல்வேண்டும். ஜலமுதலியவை கிடைகாவிடத்தில் அமுக்கியகாலத்திலுஞ் செய்

[illegible]

யலாம். அவ்விதஞ் செய்யாதவர் பெரும் பாபத்திற்குள்ளாகி ஆந்தையாகப் பிறப்பர். காலையிற் செய்யும் சந்தியாவந்தனத்தால் இராவிற்செய்த பாபமும், மாலையிற்செய்த சந்தியாவந்தனத்தால் பகலிற்செய்த பாபங்களுமொழியும். "மந்தேகர்" என்னும் ஓர்வகை இராக்கதர்கள் சூரியனை எதிர்ப்பார்களென்றும், அவர்கள் அந்தணர்களளிக்கும் அர்க்கியத்தால் ஒழிவார்களென்றும் வேதங்கூறுகின்றது. இவ்விதமறிந்து சந்தியாவந்தனத்தைச் செய்பவர் நீடூழி வாழ்ந்து பாபத்தை யொழித்துப் பரத்தி அடைபவர். யாக்ஞவல்க்கியர் தாம் எழுதிய யோககீதையில் "முற்கூறியபடி உண்மையை யறிந்து சந்தியாவந்தனத்தைச் செய்பவர் நீண்ட ஆயுளைப்பெற்றுப் பாபங்களையொழிப்பார். ஆசௌசகாலத்திலும் மந்திரங்களை மனத்தில் தியானித்துச் சந்தியாவந்தனத்தை முடித்தல் வேண்டும். முக்கியகாலத்திற் செய்யாமல் அதற்குமுன் செய்திருந்தால் மீண்டும் தக்ககாலத்தில் செய்யவேண்டும். அக்காலத்தில் செய்ததும் செய்யப்படாததும் ஒன்றே. முக்கியகாலத்திற் செய்யத் தவறினுல் பிராயச்சித்தஞ் செய்யவேண்டுமென்று சங்கிரக்காரர் கூறுகின்றார். "ஆசமனீயஞ்செய்து விதிவழுவாது பிராணனையொடுக்கி நான்காவது அர்க்கியத்தைக் கொடுத்தால் அதனுல் அக்காலங்கடந்து செய்தது நீங்கும்" என்று சம்வர்த்தர் என்பவர் "அர்க்கியப் பிரதானகாலந் தவறினுல் எண்ணூறு காயத்திரி ஜபஞ்செய்தல்வேண்டு" மென்றார்.

கௌணகாலமுங் கடந்தால் எண்ணுயிரம் காயத்திரி ஜபம் செய்தல் வேண்டும். இடங்கள் மாறுதலால் பலமும் வேறுமைப்படுமென வியாசர் கூறுகின்றார். "வீட்டில் ஒருமடங்கும், கோஷ்டிகளில் பதின்மடங்கும் நதிக்கரையில் நூறாயிரமடங்கும், கடவுள் சந்நிதியில் அளவிலாப்பயனைத் தருவதுமாகும்" என்று.

சந்தியாவந்தனஞ் செய்யும் முறை.

ஆசமனீயஞ்செய்தல் வேண்டும் "ஆபோ" என்று தொடங்கிய மந்திரத்தில் ஒவ்வோரடியின் இறுதியில் ஒவ்வொருமுறை தவருது ஒன்பதுமுறை புரோக்ஷணஞ் செய்துகொள்ளல்வேண்டும். அதைக் குறைக்கவும் மிகுதியாக்கவும் கூடாது. ஒவ்வொரு அடியிலும் பிரணவத்தைச் சேர்த்துப் புரோக்ஷணஞ்செய்யின் அதனுல் ஒரு வருடத்திற்குள் செய்த பாபம் நீங்குமெனச் சௌனகர் சொல்லுகின்றார். தண்ணீரை ஒழுகவிடாது புரோக்ஷணஞ் செய்துகொள்ளல்வேண்டும். அங்ஙனஞ் செய்யும் ஒவ்வொரு திவலைகளும் நிலத்தில் விழாது சிரசிற்றானே தங்கும்படி செய்துகொள்ளல் வேண்டும். பிறகு "சூரிய, ஆப, அக்னி" என்று தொடங்கும் மந்திரங்களால் முறையே காலை, பகல், மாலைகளில் மந்திரித்த தண்ணீரை யுட்கொள்ளல்வேண்டும். உடனே "ததி" என்று தொடங்கும் மந்திரங்களால் (ஒவ்வொரு அடியின் இறுதியில் திறத்தி உச்சரித்துப்) பதின்மூன்றுமுறை புரோக்ஷணஞ் செய்துகொள்ளல் வேண்டும். உடனே இருகைகளால் தண்ணீரெடுத்துக் காலையிலும் பகலிலும் எழுந்தும், மாலையிலுட்கார்ந்தும் காயத்திரி மகாமந்திரத்தால் மந்திரித்துச்சூரியனை நோக்கி அர்க்கியத்தைக் கொடுக்கவேண்டும். "ஸ்மிருதி சங்கிரகத்தில் தண்ணீருள்ளவிடத்திற் சென்று ஓர் மாட்டின் கொம்பளவு உயர்த்தி எடுத்துத் தண்ணீரிற்றானே அதை விடவேண்டும்" என்றிருக்கின்றது. சுட்டுவிரலும் பெருவிரலுமொன்றுடனொன்று சேராமலிருக்க

[illegible]

வேண்டும். சேர்ந்தால் அஃதை இராக்ஷசி முத்திரை என்பார்கள். மீண்டும் பிரணவத்தையும் வியாகிருதிகளையும் உச்சரித்துப் பிரதக்ஷணஞ் செய்தலவேண்டும். இதனால் மந்தேகர் என்பவர்களுக்குச் செய்த தீங்கினால் உண்டான கெடுதி ஒழியுமென்று வேதங்கூறுகின்றது. உடனே ஆசமனஞ்செய்தல் வேண்டும். "யாக்ஞவல்கியர்" என்னும் முனிவர் "வெளிப்புலன்களையடக்கி உட்புலன்களை யொடுக்கி உள்ளத்திற் செலுத்திய ஸ்படிகமணிபோன்ற நின்மலமாய தமது புத்தியில் பிரதிபிம்பித்த ஆத்தும சுவருபத்தை உபாதியை விட்டகற்றிச் சச்சிதானந்தப் பிரம்ம மயமாக நின்று அதுவே தானாய் வேற்றுமையற்றுச் சிறிதுகாலம் தியானிக்கவேண்டும்" என்று சொல்லுகின்றார். சந்தியாகாலத்திற் தண்ணீர் கிடைக்காவிடில் தன் கையினால் புழுதிமண்ணையாவது எடுத்து மூன்று அர்க்கியங்கள்கொடுத்தல் வேண்டும். அதுவுங் கிட்டாவிடத்தச் சூரியனைத் தியானித்தல் வேண்டும். பிறகு சூரியாதி நவக்கிரகங்களையும் கேசவாதிகளையும் உத்தேசித்துத் தர்ப்பணஞ்செய்தல் வேண்டும். சந்தியாவந்தனத்தில் அர்க்கியம் கொடுத்தலே மிகச்சிலாக்கியம். புரோக்ஷணமுதலிய மற்றவை எல்லாம் சுத்திக்குக்காரணமான அங்கங்கள். தண்ணீரைக் கையிலெடுத்து அத்துடன் பிரதக்ஷணஞ் செய்தலும் பிராணாயாமஞ் செய்தலும் குற்றத்தை யகற்றிக்கொள்ளும்பொருட்டே. பிறகு "இவ் வாதித்தன் பிரமம்" என்னும் மந்திரத்தை உச்சரித்துத் தன்னைச்சுட்டிப்பிரதக்ஷணஞ் செய்தலும், பாபம் விலக்கும்பொருட்டும் அஸ்திரம் திரும்பவும், உடனே ஆசமனீயஞ்செய்து ஜபம் செய்யும் இடத்திற்கேகவேண்டும். "சங்கர" என்பவர் ஜபத்திற்கு வேண்டிய விடங்களைப்பற்றிக்கூறியிருக்கின்றார். "வீட்டில் ஒருபங்கும் நதிக்கரையில் இருபங்கும் பசுக்களடிபட்டவிடத்தில் பத்துப்பங்கும், அக்கினி கிரகங்களில் நூறுபங்கும், உத்தமக்ஷேத்திரங்களிலும், தீர்த்தங்களிலும், தேவதாசந்நிதிகளிலும் ஆயிரம் பங்கும், ஈசுவர சந்நிதியில் அனந்தமாய் அம்மந்திரங்கள் பயன்படுவன" வென்பன. அவரது திருவாக்கு ஜபஞ்செய்தல் எப்பொழுதும் அடக்கமாகவே யிருக்கவேண்டும். அதுவே அதிகப் பயன்பாடுள்ளதெனப் பெரியோர் கருத்து. தர்ப்பை, கிருஷ்ணாஜினம், வஸ்திரம் இவற்றால் முறையே செய்துகொள்ளல் வேண்டும். பவித்திரம் அகப்படாவிடில் பூணூலைப் பவித்திர விரலில் தரிக்கவேண்டுமென்பது வைகானசர் கருத்து. "பிரமலோகப்வரையில்" என்றற்றொடக்கத்தின் மந்திரத்தால் தேவதைகளையும் அந்தணர்களையும் நமஸ்கரித்தல் வேண்டும். "பூதங்களொழிக" என்னும் மந்திரத்தால் பூமியைச் சுத்திசெய்து தனது இடதுகாலால் மும்முறை இடத்தைத் தடவி யுட்காரல்வேண்டும். முழங்கால், தொடை இவைகளுக்கு இடையில் உள்ளங்காலைப் புகரவிட்டுச் சமாதியுடன் பிரணவமுதலிய மந்திரங்களால் கரசுத்தி தானத்திரயம் திக்பந்தனமுதலியவை செய்து குரு முதலியவரை நமஸ்கரித்துப் பூதசுத்தி செய்துகொள்ளல் வேண்டும். பிறகு பிராணயாமம் செய்தல்வேண்டும். பெருவிரல் சுண்டுவிரல் பவித்திரவிரல் இவைகளால் மூக்கைப் பிடித்துச் சுவாசத்தை யொடுக்கி வியாகிருதி, காயத்திரி, சிரசுகளை மனதால் மூன்றுமுறை யுச்சரிக்கவேண்டும். பிராணவாயுவைத் தகைந்து கொள்ள ஆற்றலற்றவன் அதே மந்திரத்தைப் பதின்முறை ஜபித்தல்வேண்டும். இவ்வொரு மந்திரத்தின் ரிஷி, சந்தம்

[illegible]

[illegible]

[illegible]

தேவதை இவைகளை முறையே தலை, முகம், மார்பு இவ்விடங்களில் சுட்டிச் செபித்தல்வேண்டும். "மந்திர தேவதாப் பிரகாசிகை" என்னும் புத்தகத்தில் பிரணவ தேவதாத்தியானத்தில் "திவ்யரூப திவ்யாபரண திவ்யாயுதங்களணிந்த ஸ்ரீமந்நாராயணனது திருமேனி எடுத்துக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இனி வியாகிருதிகளுக்கும் காயத்திரிக்கும் முன்போல ரிஷி, சந்திரன், தேவதைகளைத்தியானித்தல்வேண்டும். ஸ்ரீகாயத்திரி தேவதையின் திவ்விய ரூபம் மந்திர சாஸ்திரத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. "முத்துப்பவளம், பொன், நீலம், வெண்மை இந்நிறங்கள் பொருந்தியதும் முக்கண்பெற்றதுமான முகங்களுடனும் தலையில் திங்கட்கலை துலங்கச் சர்வதத்துவமயமாய் நின்ற திருமேனியும், வரம், அபயம், அங்குசம், கசை, கபாலம், கயிறு, சங்குசக்கிரம், இருதாமரை மலர்கள் இவைகளைக் கையிலணிந்துமுள்ளான்" என்று சிரச் என்னும் மந்திரத்திற்கு ரிஷி, ப்ரம்மா என்றும், சந்தம், யஜுர் என்றும், பிரமன், அக்கினி, வாயு, சூரியன் இவர்கள் தேவர்களென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. பிராணாயாமத்தால் பாபங்களெல்லாம் தொலையுமென்பது ஆன்றோர் கொள்கை. காயத்திரி ஆவாகன மந்திரத்திற்கும் ரிஷி, சந்தம், தேவதைகள் இவர்களைத் தியானித்துக் காயத்திரியை ஆவாகனஞ்செய்தல் வேண்டும். யோகயாக்ஞயவல்கியத்தில் "பாக்கன், விஷ்ணு, புருஷன் என்னும் பெயர்களை வகித்தவனும் சத்தியரூபனும் உருவற்ற கடவுளைத் தியானித்து முத்திபெறுவான்" என்றிருக்கின்றது. மாலையால் அல்லது பவித்திர விரலில் நடுப்பருவமுதல் சுட்டுவிரல் அடிப்பருவம் வரையிலாவது எண்ணிவரவேண்டும். காயத்திரி ஜபித்தலில் இவ்விதக்கணனம் மிகச்சிறப்புடைத்து. 1008, 108, 28 ஆவது ஜபிக்கவேண்டும். பத்துமுறை ஜபித்தல் சர்வாதமமென வேதங்கூறுகின்றது. ஜபத்தின் இடையில் சூத்திரர், பதிதர், மாதவிடாய்காலத்திலுள்ள மாதர்கள் நீசர்கள் பன்றி இவைகளைக்கண்டால் தண்ணீரைத் தொடவேண்டும். இவைகளுடன் பேசநேர்ந்தால் ஸ்நானஞ்செய்தல் வேண்டும். வீண்வம்பில்லாது ஜபத்தை முடித்தல்வேண்டும்." "எவ்விதத்திலாவது தர்மத்தில் குறைவுண்டானால் கடவுளை நினைப்பதால் அஃது குற்றமற்றதாகு"மென்று பிராஜாபதி கூறுகின்றார்.

இன்னும் வரும்.

இலத்தூர்ச் சுந்தரராஜசாஸ்திரிகள்.

ப்ரம்மவித்தியா.

சிதம்பரம்:—விரோதி௵ வைகாசிமீ 19உ வெள்ளிக்கிழமை

கடவுள்.

தொடர்பு.

"முத்திபெற்றவர் மீண்டும் திரும்பாராயின் ஆன்மாக்கள் அநாதியாயின் ஓர்சமயம் எல்லாவான்மாக்களும் முத்திபெற்

[illegible]

ருல மீண்டுஞ் சிருட்டியுண்டாவதெங்ஙனம்?" என்று ஓர் கேள்வி ஏற்பட்டிருக்கின்றது. இவ்விதம் கேட்பவர் கருத்துப் பின்வருமாறு:—காலம் அநாதியாதலாலும், கடவுள் சிருட்டிப்பது ஆன்மாக்கள் பொருட்டாதலாலும், அச்சிருட்டியும் ஆன்மாக்களின் கன்மத்திற்கு ஏற்றதாதலாலும், ஆன்மாக்கள் கன்மமற்றிருப்பது யாண்டுமமையாதுபற்றி ஒருவரும் முத்தியைப்பெற்றார். ஒருக்கால் ஒருவன் தன் பேராற்றலால் கன்மங்களை யொழிக்க அம்முத்தி வைபவத்தைப் பெறினும் அவனுக்குப் பதிலாகப் பிறிதோருவன் சிருட்டிக்கப்படாமையால், சிறிதுகாலத்தில் ஆன்மாக்களின் தொகை ஒவ்வொன்றாகக் குன்ற ஓர்சமயம் எல்லாரும் முத்திபெறின் மீண்டுஞ் சிருட்டியுண்டாவது எட்டுணையேனும் இயையாது. இனிக் கடவுள் தன் பொருட்டே சிருட்டிக்கின்றாரென ஒப்பின், அவர் பேராற்றலுடையவராதலால் அவ்வச்சமயங்களில அவர் எண்ணில்லாத ஆன்மாக்களைச் சிருட்டிப்பார். ஆகலாற்றான் விவிலியர், கடவுள் தன்பொருட்டே சிருட்டிக்கின்றாரென்றும், பிறர்பொருட்டல்லவென்றும், இஃதே முதல் சிருட்டி என்றும், மீண்டு சிருட்டிக்க மனமிருப்பின் சிருட்டிப்பாரென்றும், அவ்விதம் செய்வதே கடவுளுக்கு இயற்கை என்றும் கூற்ற. ஜீவர்களுக்குக் கன்மம் விசித்திரமாதலால் முறையே ஒவ்வொருவர் முத்திபெறக் காலக்கிரமத்தில் ஜனங்கள் தொகை குன்ற வேண்டியதாகவிருக்க இப்பொழுது பெருகுவது பிரத்தியக்ஷ சித்தமாகவிருக்கின்றதே. ஓர் கட்டடத்தில ஜனங்கள் லக்ஷம் பெயர்களிருந்தால் ஒவ்வொருவராக வெளிவரக் காலக்கிரமத்தில ஒருவருமற்றுச் சூன்னியமாகவிருக்கவல்லவோ நேரிடும். ஆதலால் இற்றைக்கு ஜனத்தொகை வரவர மிகுதியாவதைப் பிரத்தியக்ஷமாகக் காண்கின்றோமாதலால் பிரஜைகளின் சுபாவத்தைப்பற்றி ஆலோசித்தபோதிலும் இவர்கள் கடவுளால் அடிக்கடி சிருட்டிக்கப்படுகின்றார்களெனத் தெற்றெனப் புலப்படும். ஆகலால், மறுசிருட்டி யுண்டாவதற்கென அவசியம ஜீவர்கள் அநித்தியர்களென்றும் கடவுள் தன்பொருட்டே சிருட்டிக்கின்றாரென்றும ஒப்புதல்வேண்டும். இனி ஆரியர்கள் ஜீவர்கள் அநாதியென்றும் கடவுள் பிறர்பொருட்டே சிருட்டிக்கின்றாரென்பதும் யுத்திக்கொவ்வாதது. விவிலியர் கூறுவதே யுத்திக்கொத்தது. அதுகொண்டே அவ்விவிலியக்கடவுள் வாக்கென்பது. முன சிருட்டிகாலத்தில் முத்திபெற்றவர்களே தேவதூதர்களெனப் பரமண்டலங்களில் வசிப்பவர்கள். மேலும் ஒவ்வொருவரும் உலகத்தில் பயனற்ற தொழிலில முயலாரென்பது இயற்கையாதலால் கடவுள் இப்பயனற்ற தொழிலில் கடவுள் முயற்சிக்கின்றாரென்பதனைத்துணைக்குறைவான சங்கதி. ஆதலால சிருட்டி முதலிய கருமங்கள் பிறர் பொருட்டெனில், அது பயனற்றதாதலால் அதைக்கடவுளுக்கு அளிப்பது அவர் இலக்கணத்திற்குக் குறைவாக முடியும். ஜீவர்கள், ஆன்மாக்கள் அந்தந்தத் தொழிலைத் தாமே நடத்திவரக் கடவுளது ஏவுதல் எதற்கோ? அவ்வான்மாக்கள் அறிவுள்ளவர்களும் அநாதிகளுமாதலால், அவர்களுக்கிவர் நாதனாவதெங்ஙனம்? அவர் இனி ஏவுதல் செய்கின்றாரெனில் தாமே தீயதொழிலில் ஏவி அதற்கென அவனை நரகத்தில் வீழ்த்துவது உசிதமோ? இத்தகைய ஏதுக்களால் ஜீவர்கள் அநாதிகள் என்றும், சிருட்டி பிறர்பொருட்டென்றுஞ் சொல்லுதல் குற்றமுள்ளதாதலால் அதை விட்டொழிந்து தன்பொருட்

[illegible]

டென்றே ஒப்பவேண்டியதாக முடிதலால் இது மூதற்கேள்வியிற் சேர்ந்ததென்பது. இதற்குச் சமாதானம். ஐய, ஜீவர்கள் கன்மமற்றிருத்தல் எவ்வாற்றானு மியையாதென்பது ஆசாமாத்திரமல்லவோ? உலகத்தில் தொழில் ஒவ்வோர் மனிதனுக்கு ஒவ்வோர்விதமாயிருக்க யாம் காண்கின்றோம். ஒருவன் இடைவிடாது முயலுகின்றான். ஒருவன் சோம்பலுறுகின்றான். ஓரிடம் தொழில் அதிகமும ஓரிடம் குறைவாகவுமிருக்ககாண்கின்றோம. இனி ஓரிடத்திற்கோரிடம் முறையே குறைந்துவர முடிவில் சூந்நியமாமென்பதற்குத் தடையாதுளது. மேலும் நாம் ஒவ்வோர் தினமும் சுழுத்தியில முற்றிலுங் கன்மமற்றவர்களாயிருக்க நேர்ந்திடவில்லையா? ஆதலால் தொழிலற்ற நிலை ஒருவனுக்கும் ஒருகாலும் இடையாதென்பது தன்னைத்தானறியாக் குற்றத்தாலென்றறிக. ஆயின இவர் சுட்டிய ஏது அவலமாயிற்று. இனித் தன்முயற்சியால் இருவினைகள் ஒழியின், அவ்விருவினைப்பயன்களொழியுமாதலால் ஆன்மாக்கள் மோக்ஷமெனனும் பேரானந்தப் பெருவெள்ளத்திற பெறுகிற்பார்கள். அந்தோ! இவ்விஷயத்தில் சாத்திரவாராய்ச்சி எட்டுணையுங் கிடைக்கப்பெறாத சிலரால் வரையப்பட்ட விவிலிய புத்தகத்தை நம்பிய இவர்கள் வேறம்போக்குச் சிலவார்த்தைகளைச் சொல்லினும் அதை அறிஞர்கள் ஒப்புவார்களோ? இனி காலஞ்செல்ல ஆன்மாக்களின் தொகை குறைய மீண்டும் சிருட்டியுண்டாவதெப்படி யெனில், கூறுதும்.

யாம் ஆன்மாகள் அநாதிகள் என மொழிந்ததுபோல அவர்கள் கணக்கிடக்கூடாதவர்களெனச் சொல்லியிருக்கின்றோம். அவர்கள் எல்லோருமோர் காலததில் முத்தியைப் பெற்றிடினும் அக்காலம் மீண்டுஞ் சிருட்டியுண்டாகுமென்பது எக்காரணத்தால் நிச்சயிக்கத் துணியப்படுகின்றது. எவ்விதப் பிரமாணத்தாலும் அறியக்கூடாத ஒருகாலத்துப் புகையைக்கொண்டு அக்காலம் நெருப்புண்டாமென ஒருவன் ஊகித்து அந்நெருப்பால் இக்காலத்து நாம் ஏன் உலரவில்லை என்றால் அஃது எவ்விதம் ஒப்புக்கொள்ளத்தக்கதாகும்? ஐயா! தத்துவசாத்திரங்களை ஆராய்ந்து பொருட்களின் குணங்களை நேரில் கண்டறிந்த உங்களுக்கு அணுக்களாயுள்ள பொருட்கள் அநாதி நித்தியங்களென்பதைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? யாம் ஆன்மாக்கள் அநாதி நித்தியங்களெனவும் அணுக்களெனவும் முன்னரே எடுத்துக் கூறினோமல்லவா? ஆயின் வெறுஞ் சொல்மாத்திரையின் சாரமான மற்றவர் வாதத்தை நம்பிக் கெடாதீர்கள். ஜனத்தொகை வரவர விருத்தியடைவதைப்பற்றி ஆன்மாக்களைக் கடவுள் தினேதினே சிருட்டித்து வருகின்றாரென்பதைப்பற்றி எங்களுக்குப் பெருநகை யுண்டாகின்றது. ஐயோ! அவர்கள் என்செய்வார்கள். அவர்கள் படித்த புத்தகத்தில் மிருகங்கள், பக்ஷிகள், ஊர்வன இவைகளெல்லாம் ஆன்மாக்களென்னும் விஷயம் சிறிதும் புலப்படவில்லை. ஜனத்தொகை பெருகினும் மிருகத்தொகை ஏன் குறையக்கூடாது. அதைத் யார் அறிபவர்கள். எத்தேசத்தவரும் ஒன்றுபட்டு இத்தொகையை ஏற்படுத்தினாரில்லையாதலால் இத்தொகையையும் சம்பந்தமுடையதல்லவெனச் சிலர் சாதிக்கின்றார்கள். ஆதலால் இவர்கள்வாதங்களெல்லாம் பாமரர்கள்முன்னிலையிலேயேயன்றிப் பண்டிதர்கள் முன்னிலையில் மணம்பெறாது. சிருட்டி என்பது பிறர்பொருட்டென்பதேயுண்மை. மிருகங்கள் ஆன்மாக்களென்பதைப்பற்றி மறுபிறப்பிற்றானே எழுதினோம். அதைமீண்

[illegible]

[illegible]

[illegible]

றும் வகையோம். மறுபடி சிருட்டிப்பது உண்மையாயின் அவகது விவிலியமே உண்மைநூலாகாதொழியும். அவரது விவிலியத்தில இதுவே முதல் சிருட்டியெனக் கூறப்பட்டுள்ளது சொப்பனத்தில் விழித்த சிலர் முன் சிருட்டிகாலத்தில் முத்திபெற்றவர்கள் தேவனுடன்கூடச் சொர்க்கத்தில் வசிக்கின்றார்களெனவும் கூறிநிற்கின்றார். இஃது அவர் புத்தகத்திற்கே முற்றிலும் மாறானது. அப்புத்தகத்தில் சிருட்டியைப்பற்றிச் சொல்லுமிடத்து நமது வேதங்களிற் கூறியுள்ளதுபோல் முற்சிருட்டியின் கதை சிறிதுமில்லை. ஆரியமத சாஸ்திரங்களோ! பூர்வசிருட்டியைப்பற்றிச் சொல்லுகின்றனவேயன்றி வரும் சிருட்டியைப்பற்றிச் சிறிதுஞ் சொல்லவேயில்லை. சிருட்டிதினங்களில் ஆறேதினத்தில் முதற்காரணமின்றிப் பற்பல பொருள்களைச் சிருட்டித்துப்பிறகு ஒழிவுபெற்றப்பெருந்தூக்கந் தூங்கும் கடவுள் ஆன்மாக்களை அடிக்கடி சிருட்டிக்கின்றனென்பது யாங்ஙனமடையும்? சிருட்டி தொடங்கிய சிறிதுகாலத்தில் ஆன்மாக்கள் அதிகமானதைக்கண்டு பொறுமையற்றுப் பிரளயத்தால் ஒழித்து மீண்டும் பிரளயத்தை யுண்டாக்குவதில்லையெனப் பிரதிக்ஞை செய்த அக்கடவுள் ஒருபயனைச் சிறிதும் எதிர்நோக்காது அடிக்கடி ஆன்மாக்களைச் சிருட்டித்து வருவானென்பதை அறிஞர்கள் ஒப்புவார்களோ? கடவுள் சிருட்டியைக் காரணமின்றிப் பிறர்பொருட்டுச் செய்வாரென்பது யுக்திக்கொவ்வாதென நீர் சாற்றியதை ஈண்டு மறுப்பாம். அநாதிமலத்தில் கட்டுண்ட ஆன்மகோடிகள் தம்மையறிந்து பிறப்பிறப்பை யொழிந்துப்போனந்தம் உய்யும்பொருட்டு இவர்களுக்குத் தநுகரண புவனபோகங்களை அமைத்து வருகின்றாராதலால் அஃது அவரிடத்துக் குற்றமாகாது. உலகத்தின்கண் ஒருவன் ஓர் பிரயோசனத்தை எதிர்நோக்காது ஒருவனுக்கு நேர்ந்த இடையூறை விலக்குவனேல், அதனால் தனக்குப் பயனற்ற தொழிலைச் செய்தவனெனக் குற்றங்கூற இடமாமோ? உலோகோபகாரி என்றல்லவோ அவனைத் தோத்திரஞ் செய்யவேண்டும். கருணைக்கடலாய கடவுளிடம் குற்றங்கூற வெழுந்த இத்துர்வாதிகளின் கொடுமையைக்கண்டீர்களா! இவற்றால் கடவுளுக்கு நேர்ந்த சர்வஞ்ஞத்தன்மை யொழியாது. ஆன்மாக்கள் தத்தந்தொழிலில் சுதந்தரரேனும் அத்தொழிலின் பயனைப்பெறுதலில் பரதந்திரரே. ஓர் நற்றொழில் மற்றோர் நற்றொழிலுக்குக் காரணமாயின் முற்றொழில் பயனுண நற்றொழிலை யளிப்பது அக்கடவுளுக்கே சுவதந்திரம். அதனால் அவர்க்குள்ள சுவதந்திரம் ஒழியாதென்பதைப்பற்றிமுன்னரே எழுதினோம். ஆதலால் யாம் தொட்டவழி குற்றமற்றது. ஆன்மாக்கள் அநாதிநித்தர்கள். கடவுள் தொழிற்களிற் பயனையளிப்பவர். சிருட்டி என்பது தன்பொருட்டல்ல. இதுவே ஆரியர் கொள்கை. இனிக்கடவுள் தன்பொருட்டே சிருட்டிக்கின்றாரென்னும் வாதிக்கும் வாதி ஆன்மாக்களுக்குத் தநுகரணாதிகளை யளித்ததற்குக் காரணம் யாதுமுரைக்க ஆற்றலற்றவனென்பது திண்ணம். அவர்கொள்கையில் ஆன்மாக்கள் கைமுதலியவற்றால் செய்யவேண்டிய செயல் யாதுமில்லையாதலாலென்க.

வரும்.

[illegible]

சம்ஸ்கிருதபாஷை.

வியாகரணம்.

தொடர்பு.

—:o:—

அறிஞர்காள்! இத்தகைய வியாகரணத்தால் சுட்டுதல் இவ்வாரியபாஷை யாண்டு மற்றவையுடனே சேராது. ஆதலாற்றான் இப்பாஷையில் ஏனைய பாஷைகளைப்போல வேறு பாஷைச் சொற்கள் சிறிதும் வந்தணுகுவதில்லை. உலகத்திலுள்ள எப்பாஷையாவது ஆரியபாஷையின் சம்பந்தமற்றதாக நிற்கக்கண்டிலேம். இவ்வணமிருக்க நம்மவருளொருவர் ஏதோ பூர்வகன்மபரிபாகத்தால் மேற்றிசையார் மதத்தைக் கைக்கொண்டு இத்தேசத்து உயர்குலத்தோர் உயிர்க்குயிரான வேதங்களில் பாரசீக பாஷையிலிருந்து வந்து சேர்ந்ததாகக் கருதி மயங்குகிறார். அவர் நமது வியாகரணத்தின் சிறப்பைச் சிறிதுமறியாதவரென நன்கு விளங்குகின்றது. இப்பாஷையிற்றானே சொற்களுக்கு வேண்டிய பகுதிகள் நிறைந்திருக்க அவைகளைக்கொண்டே நமக்கு வேண்டிய சொற்களை அவ்வப்பொருட்டன்மைக்கேற்ப உண்டாக்கி வழங்கத் தக்கதாயிருக்க அவற்றை விட்டொழித்துத் தமக்குத்தோன்றியதை எழுதுவது இவர்க்கே அழகாமபோலும். இந்தப் பாஷையில் பகுதிகள் இலக்கணம் விட்டொழிந்தனவும் எல்லை கடந்தனவுமாயிருக்கின்றதல்லவா? எண்ணும் இலக்கணமும் காலத்தால் அல்லது தேசத்தால் மாறுகின்றதா? இவ்விதமிருத்தலல்லவோ இப்பாஷைக்குப் பேரணி. இவ்வியாகரணம் பரிபூரணமாதலால் இதில் சொல்லிலக்கணமட்டில் ஒழியாமல் பறை, பச்சியந்தி, மத்திமை, வைகரி முதலிய வாக்குகளின் வேற்றுமைகளும் அவைகளினிலக்கணமும் யோகிகளும் அறியும்படி எடுத்து நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. அந்நாலவகை வாக்குகளுள் "மத்திமை" என்னும் வாக்கிலடங்கிய நாதாம்சமாகிய "ஸ்போட" மென்பதே உலகத்திற்குபாதான காரணமென்றும், அஃது பிரளயம வரையிலுள்ளதென்றும், சொல்லும் பொருளுமாயமைந்த இவ்வுலகெல்லாம் சத்தத்தில் தோன்றியதெனவும், உலகம் அநிர்வசனமித்தை எனவும், உபநிடதங்களாலறியத்தக்க அப்பரப்பிரமப் பொருளொன்றே உண்மைப்பொருளெனவும் அதே வியாகரணத்தில் துணியப்பட்டிருக்கின்றது. அதுகொண்டே நாகேசபட்டர் முதலிய அநேக அறிஞர்கள் முத்திக்கு வழியாக இவ்வியாகரணத்தையே கொண்டனர். அவரறிவாலும் அபிமானத்தாலும் இவ்வியாகரண விஷயத்தில் தமது மேலான அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கின்றார். அவர்கள் கொள்கையாவன:—

சத்தங்கள் அகண்ட வாக்கியங்களாய் அநாதிநித்தியங்களாயுள்ளன. பிறர்க்கு அவற்றினுண்மையைப்போதிக்கவேண்டி முற்காலத்து முனிவர்கள் இவ்வழியைக் கண்டார்கள். அதாவது:—அகண்டமான வாக்கியத்தைச் சொற்களாகப் பகுத்தார்கள். அச்சொற்களையும் பகுதி விகுதியென இருபகுப்புண்டாக்கினார்கள். இவ்விலக்கியங்களுக்கு இலக்கணங்களைப் பொதுச்சிறப்பென இருவகையாக வகுத்தார்கள். ஆதலாற்றான் உபநிடதத்தில் "சத்தப்பிரமத்தில் நிலைபெற்றவனே சுத்தப்பிரமத்தை அடைவான்" எனறிருக்கின்றது. இவ்விஷயங்களனைத்தையும் உள்ளத்திலிருத்திய ஸ்ரீ பர்த்திருஹரிமுதலிய முன்னோர் வையாகரணர்களுடைய சித்தாந்தத்தை எல்லோருமறியும்படி எளியநடையில் எழுதிவைத்தார்கள்.

இன்னும் வரும்.

[illegible]

— :(*):—

[illegible]

[illegible]

விரும்பியதுகைகூடியது.

ஐய, நீடூழிகாலமாய் ஆரியமதம் ஒழிந்துவருவதால் எமக்கு அடங்காத்துயரம உள்ளத்திலுண்டாக்கியது. இந்தரோகம் எவ்விதத்திலும் ஒழிக்ககூடாததாக யிருந்தது. புறமதப் பைசாசம் பிடித்தால் அதை எவ்வித மந்திரத்தாலும், எவ்வித மணியாலும், எவ்வித ஔஷதத்தாலும் ஒழிக்கவாற்றலற்றிருந்தோம். ஓர்சமயம் அதை எவ்விதத்திலேனும் ஒழிப்போயென வெளிவருவோமேனும் எவ்விதத்திலும் அப்பிசாசம் பிடித்தவனை மூனனிலையிற் கொண்டு வருவதற்கு அறிஞர்களால் கூடவில்லை. முற்றிலும் முன்னிலைமை அவர் பெறுவிடினும் அவனை நம்மவனென்று எவ்விதமேனும் அழைக்கத்தக்க ஓர் வழியேனும நம்தேயத்தவர் விடாவிடின், அடிக்கடி குறைந்துவரும் ஆரியர் சந்ததி சிறிதுகாலத்தில் ஆகாயமலரின் தாதுகளைப்பற்றிநிற்கும் என உலகநடையை யறிந்த உண்மையறிஞர் மனம்வெதும்பி நின்றது. ஆயினும் அவர்கள் இவ்வபூர்வ தர்மத்தை ஸ்தாபிக்க வாற்றலடைந்தார்களில்லை. இஃதைச் செய்யும வலிமைபெற்ற மடாதிபர்களோ! தமக்கு மதம், வர்ணம், தர்மம் இவற்றிலுள்ள சுவதந்திரத்தை மறந்து உலகபீடையை யறியாது ஏதோ மடத்தின் ஓர்கோணத்தில நீண்ட நித்திரா மகாவிருதத்தைக் கைக்கொண்டிருந்தார்கள். ஆயினும், இத்துர்மதப் பெருவெள்ளம் பெருகித் தலைமேலோட அதனுள்ளாழ்ந்து அகப்பட்டுள்ள எமது மதம் தமது பிராணனேயாக வலிமையால் தம்முயிரை வைத்துக்கொண்டிருக்குங்காற்றானே நம்மாசாரியர்கள் விழித்ததைப்பற்றி யாம் பரமானந்தமுறுகின்றோம். ஐயன்மீர், நமது பரமாசாரியர்கள் செய்த தொழிலை இவர்கள் கையாடக் காலம் நேர்ந்தது. அது அடியிற் காட்டப்படும் இரண்டு சரித்திரங்களாலும் நன்குபுலப்படும். அந்தோ! மேற்றிசையார் இயற்கையில் வெண்ணிறம் பெற்றவரேனும் அவர் முகம் சிறிது கருமையடைந்தது. இதுகாறும் மேற்றிசையார்விடாமுயற்சி எடுத்ததெல்லாம் நம்மவரையே தம்மதத்திற்சேர்த்துக்கொள்வதேயன்றி வேறில்லை. இதற்குக் காரணம்:—நம்மவர் பிறர் மதத்திற்சார்ந்தவரை மீண்டுஞ் சேர்ப்பதில்லை என்பதே. ஆதலாற்றான் இவர் நம்மவரைச் சேர்ப்பதுபோல மசமதியரைச் சேர்ப்பதில்லை. சேர்த்தால் அவர்கள் உடனே பிராயச்சித்தம்செய்துகொண்டு தம்மதத்தில் சேர்ந்துவிடுவார்கள். இவ்விதம் யாமும் செய்வோமேயானால் இவர் இருகையும்விட்டு ஒழிந்துவிடுவார்கள். உலகத்திற் பெரும்பான்மையோர் பணத்திற்கெனவே பிறர்மதம் புகுகின்றார்கள். அவர்களுள்ளமட்டும கொடுத்ததை யுண்ணுவிட்டுப் பிறகு நம்மதத்திற்கு வந்தால் அவர்க்கதனால் வரும பயன் யாது. அம்மட்டோ! இனி ஒவ்வொருவரும தமக்கு வேண்டிய பணத்தைக்கேட்பார், இல்லையென்றால உடனே எம்மதம் புகுவேனென்பார்கள். இவ்விதமாயின் கிழவன் மடந்தையைப் பெண்டுபிடித்ததுபோல் சீடர்களுக்குத் தொண்டுபுரிவதே இவர்கள் கடமையாகும். ஆசை அளவுகடந்ததாதலால் இவர் பணம் ஒருவருக்கும் போதியதல்ல. நம்மவர் கண்டவழி நீடூழிவாழவும், அதை மடாதிபர் ஆதரிக்கவும், வித்துவான்கள் ஆமோதிக்கவும் கருணைக்கடலாய கடவுள் அருள்புரிவாராக.

இந்துமதத்திற் சேர்த்துக்கொள்ளல்.

மைசூரிலிருக்கும் பாரிஸ்டர் மீனாக்ஷி ஐயர் பிள்ளைகள் இளவயதில் சீமைக்குப் போய் வந்தநி நிமித்தம் ஜாதிப்பிரஷ்டர்களானதை நீக்கிப் பிராயச்சித்தம் செய்து இந்துமதத்தில் சேர்த்துக்கொள்ளும்படி ஜகத்குரு ஸ்ரீசிங்கேரிஸ்வாமிகள் இட்ட கட்டளைப்படி அவர்கள் இராமேசுவரத்தில் பிராயச்சித்தஞ்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

செய்து முடித்துக்கொண்டு இந்தியாவின் தென்பாகத்திலுள்ள புண்ணியஸ்தலங்களை விஜயம்செய்து ஸ்தலயாத்திரை செய்து கொண்டு வருகையில் சென்றவாரம் கும்பகோணம் வந்துசேர்ந்தார்கள். அங்கு ஸ்ரீமத் சங்கராசாரியசுவாமிகள் அவர்கள் மறுபடி இந்துமதத்திற் சேர்த்துக்கொள்ளப்பட்டதை யங்கீரித்து மீனாக்ஷி ஐயருடைய பந்துக்கள், கும்பகோணம் வைதீக ஜனங்களுக்குச் சமாராதனை செய்ய விரும்பியதை ஒப்பி அதற்காக அவருடைய மடத்தை அவர்கள் வசம் ஒப்புவித்தார். அப்பொழுது கும்பகோணத்திலுள்ள வைதீக ஜனங்கள் பெரும்பாலாரும், அவ்விடத்துள்ள படிப்பாளிகள் பலரும் அவர்கள் செய்த விருந்தை யேற்றுக்கொண்டு அவர்களுடனிருந்து பந்திபோஜனம் செய்து போனார்கள். கும்பகோணம் காலேஜ் ம-ா-ா-ஸ்ரீ சாது. சேஷையர் அவர்கள் இது விஷயத்தில் மிகச் சிரத்தை யெடுத்துக்கொண்டு எல்லாம் சிறப்பாய் நடந்தேற மிகப்பாடுபட்டு வந்தாரெனக்கேட்டு மிகச் சந்தோஷப்படுகிறோம். சு. மி.

பிராயச்சித்தம்.

சுமார் ௭, ௮-வருஷங்களுக்கு முன் கிறிஸ்துமதம் புகுந்த மானவேலையா என்பவரும், அவர் குடும்பத்தாரும் கிறிஸ்துமதம் உண்மையென்று கொண்ட நம்பிக்கையை அவர்களுடைய அனுபவத்தில் இழந்துபோகச் சென்ற வருஷம் அவர்கள் மறுபடியும் இந்துமதத்திற்குத் திரும்பக்கருதி அக்கருத்தை நிறைவேற்றிவைக்கச் சென்னையிலுள்ள சில இந்துக் கனவான்களைக் கோரிக்கொண்டார்கள். இவர்கள் ஆதியில் ஸ்ரீவைஷ்ணவர்களாகப் பிறந்து ஸ்ரீராமானுஜாசாரியருடைய மதக்கொள்கையையனுசரித்து வந்தார்கள். இப்பொழுது மறுபடியும் இந்துமதத்திற்குவர அவர்களுக்குப் பிரியமிருப்பதுடன் அவர்கள் மனச்சாட்சியொப்ப இந்துமத முண்மையென்று அவர்கள் மனதிற்குப்பட்டிருக்குமானால் அவர்கள் மறுபடியும் இந்துமதத்திற்கு வரத்தடையில்லை யென்றும், ஆனால் இதுவரையில் மதப்பிரஷ்டர்களாகவிருந்து வேறுபட்ட ஜாதி மதாசாரங்களை யனுட்டித்துவந்ததற்காகத் தக்க பிராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டு மென்றும், இந்து பண்டிதர்கள் கூடி யோசித்து முடிவுக்கு வந்த தீர்மானம் அவருக்குத் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் அவரும் அவர் குடும்பத்தாரும் இந்துமதத்தில் தங்களுக்குள்ள நம்பிக்கையைப் பக்தியோடு எழுத்துமூலமாய் வெளியிட்டு அப்பத்திரத்தை ரிஜிஸ்திரார் ஆபீசில் கொண்டுபோய் ரிஜிஸ்தர் செய்துவைத்தார்கள். இப்படி அவர்கள் நம்பிக்கையை உறுதிமொழி கூறித் தெரிவித்து ரிஜிஸ்தரும் செய்துவைத்தபின் அவர்கள் இந்துமதத்திற்குத் திரும்பிவிட்டதாக இந்துக்களடங்கிய கூட்டம் ஒன்றால் ஒப்புக்கொள்ளப்பட்டார்கள். அவர்கள் மறுபடியும் ஜாதியில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்காகச் செய்யவேண்டிய பிராயச்சித்த சடங்குகள் செய்வதற்காக வேண்டிய செலவுக்குப் பொதுஜனக் கையொப்பம்போட்டு நிதி சேர்த்து நாளது மாதம் ௪, ௫, ௬-ந்தேதிகளில் சாஸ்திர முறைப்படி திருவட்டீசுவரன்பேட்டையில் பிராயச்சித்தச் சடங்குகள் யாவும் தக்க வைதிகர் புரோகிதர்களைக் கொண்டு சீராகச் செய்துவைக்கப்பட்டன. இதற்குப் பிடித்த செலவு மொத்தம் 100-ரூபாய்க்கு மேலாயிற்று. பிராயச்சித்தம் செய்துகொண்டு ஜாதியில் சேர்ந்தபின் அக்குடும்பத்தார் புண்ணியஸ்தலயாத்திரை செய்துவரப் புறப்பட்டுப் போயிருக்கிறார்கள். சு. மி.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

பஞ்சாங்க நியாயாதர்சம்.

தொடர்பு.

இரண்டாவது ஆட்சேபம்.

பிரத்தியட்சம் கிரகணாதிகளுக்குப் பிரமாணமாவதுபோல் திதிவாதிகளுக்குப் பிரமாணமாகாதென்று தர்மசாஸ்திரஞ் சொல்லுகின்றது. ஆகையால் திதியைப் பிரத்தியட்சமென்று ஸ்தாபித்தாலுங்கூட அந்தப் பிரத்தியட்சத்தைப் பிரமாணமாகக்கொண்டு திர்க்கணிதக்காரர் நிச்சயிக்கும் திதி சிரார்த்தார்கம் ஆகமாட்டாதென்பது சாத்திரத்தின் துணிபு.

சமாதானம்.

சொக்ஷுஷிகளுக்குப் பிரத்தியட்சம் பிரமாணமாவதுபோல் திக்கியாதிகளுக்கு ஆகாதென்று சாத்திரங் கூறியிருக்கிறது சரியே. அச்சாத்திரத்தை அநுசரித்தே இவ்விஷயத்திற்கும் திர்க்கணிதக்காரர் ஓரேவிதமான பிரத்தியட்சத்தைப் பிரமாணமாகக் கொள்ளுகிறதில்லை. அஃதெவ்வாறெனில்,—ஜ்யோதிஷத்தில் பிரத்தியட்சமென்பது பூப்ருஷ்டப்பிரத்தியட்சம், பூமத்தியப்பிரத்தியட்சம் என இருவகையாம். பூப்ருஷ்டப் பிரத்தியட்சமாவது, பூமியின் மேற்புறத்தினின்று கிரகங்களைப் பார்ப்போர்க்கு அவைகள் தோன்றும்விதம். பூமத்தியப் பிரத்தியட்சமாவது, பூமியின் மத்தியிலிருந்து ஒருவன் கிரகங்களைப் பார்ப்பானாயின் அவனுக்கு அவைகள் தோன்றும் விதம். கிரகணங்களில் பூமியின் மேற்புறத்தினின்று பார்ப்போனுக்குத் தோன்றும் ஸ்பரிசகாலமும், மோட்சகாலமும் பிரமாணமாகும். அதாவது கிரகணத்திற்குப் பூப்ருஷ்டப்பிரத்தியட்சம் பிரமாணம் என்றபடி. திதிகளுக்கு, பூப்ருஷ்டப் பிரத்தியட்சத்தைப் பிரமாணமாகக் கொள்ளாமல், பூமத்தியினின்று பார்ப்போனுக்குத் தோன்றுவதைப் பிரமாணமாகக் கொள்ளவேண்டியது. அதாவது திதிக்குப் பூமத்தியப்பிரத்தியட்சம் பிரமாணம் என்றபடி. சாத்திரம் விதித்திருப்பது இதுவே. இவ்விதிப்படியே திர்க்கணிதக்காரர் திதியைக்கணித்து வருகிறார்கள். ஆகையால் அவர்கள் கணிக்கும் திதிகள் சிராத்தார்ஹங்களேயாம்.

மூன்றாவது ஆக்ஷேபம்.

திதிமுதலான விஷயங்களைக் கணிக்கிறதற்கு முன்னோர் ஏற்படுத்தியிருக்கும் வாக்கியங்களை ஸம்ஸ்காரம் (சுத்தி) செய்து கொள்ள வேண்டியதில்லையென்று ஆவசியகமென்று ஏற்பட்டாலும், சாத்திரம் பீஜசம்ஸ்காரத்தை விலக்கியிருக்கிறது; அவ்வாறு விலக்கப்பட்ட சம்ஸ்காரத்தைத் திர்க்கணிதக்காரர் செய்துவருகிறார்கள். ஆகையாற்றான் அவர்கள் பஞ்சாங்கத்தில் திதிவித்தியாச முண்டாகின்றது. சாத்திரம் விலக்கியதை அநுசரித்துத் திர்க்கணிதக்காரர் திதியைக்கணித்தலால் அவர் சொல்வது கிராகியமன்று.

சமாதானம்.

திக்கியாதிகளில், சாத்திரம்விலக்கியபீஜசம்ஸ்காரத்தைத் திர்க்கணிதக்காரர் செய்கிறதேயில்லை. சாத்திரம் அவசியம் செய்யவேண்டுமென்று விதித்திருக்கும் சாலனசம்ஸ்காரத்தைச் செய்துவருகிறார்கள். இவ்வாறு சாஸ்திரீயமாய் ஆவசியகமென்று விதிக்கப்பட்ட சாலனசம்ஸ்காரத்தை வாக்கியபஞ்சாங்கக்காரர்கள் செய்து வாராததினால் அச்சம்ஸ்காரமின்றிக் கணிக்கும் திதி, சாத்திரப்பிரகாரம் அக்கிராகியமாகின்றது. சம்ஸ்காரமென்பதற்குச் சுத்தப்படுத்தல் என்பது பொருள்.

வரும்.

விளம்பரம்.

யாவர்க்கும் உபயோகம்!!

இப்ப்ரம்மவித்தியா தவசகிய முதல் இரண்டுவருடங்கள் வரையிலுமுள்ள பத்திரிகைகளனைத்தும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு பயின்டு செய்யப்பட்டபுத்தகங்கள் 50-று விலைபெற்றதுபோக பாக்கியுள்ளகாப்பிகள் சொற்பகம உள்ளகாபி மிகசொற்பமத;லின், ஒருவருடப்புத்த 1காபே-க்கு 2—8—0 ஆக இரண்டுவருடப்புத்தகங்கள் 5 ரூபாய்க்கு விற்கப்படும். வேண்டுவோர், போஸ்டேஜ் உள்பட 5—6—0 மாகச்சேர்த்தனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். போனால் வராது.

இந்துடிராக்ட் சொஸைட்டி.

(இந்து லகுலேக சங்கம்.)

இஃது 1887ஹு ஏப்ரல்மீ 27உ ஸ்தாபிக்கப்பட்டது

இச்சங்கத்தின் கருத்து:— இந்துமதத்தைப் பரவச்செய்து, அதன் விரோதிகளைக் கண்டித்துத் தேசக்ஷேமத்தை நாடுதலாம். இச்சங்கத்தில் மெம்பர்களாகச்சேர விருப்பமுள்ளவர்கள் ஹு 1-இ குறைந்த சந்தா 1—4—0 முன்பணமாகக்கட்டவேண்டியது.

ஏப்ரல்மீ முதல் மறுவருஷம் மார்ச்சுமீ வரையில் அந்தந்தவருஷமுடிவாகும்.

அக்கிராசனாதிபதி:— R. சிவசங்கரபண்டியா. B. A. F. T. S. அவர்கள்

வெளியூர் உப அக்கிராசனாதிபதி:— சிதம்பரம் ப்ரம்மவித்தியாபத்திராதிபர், ப்ரம்மஸ்ரீ கு. ஸ்ரீநிவாசசாஸ்திரியாரவர்கள்

காரியதரிசி:— ஸ்ரீமான் W.A. கிருஷ்ணமாசாரியார் B. A. அவர்கள்.

இந்தச் சங்கத்தைப்பற்றி மற்றவிஷயங்களை அறியவிரும்புபவர்கள், அரையணாஸ்டாம்பாவது, ரிப்ளை கார்டாவது அனுப்பிக் கேட்டுக்கொள்ளலாம்.

கடவுள் துணை.

Terms:—Cash. விலை ரொக்கம்.

NOW READY FOR SALE.

விரோதிவருஷத்திய

ரிப்பன் தமிழ்ப் பாக்கெட் பஞ்சாங்கம்.

விற்பனைக்குத் தயாராக விருக்கிறது.

பிரதி 1-க்கு விலை அணா ஆறு; பிரதி 1-க்கு தபாற்கூலி அணா அரை.

பாக்கிங் சார்ஜ் பிரதி 1-க்கு 0-0-6; 10-க்கு 0-2-0; 25-க்கு 0-4-0; 50-க்கு 0-6-0; 100-க்கு 0-8-0.

ஒரேமுறையில் 10 புத்தகங்கள் வாங்குவோர்க்கு 1-ம்; 25-க்கு 3-ம்; 50-க்கு 7-ம்; 100-க்கு 15-ம்; கம்மீஷன் கொடுக்கப்படும்.

கொஞ்சம் காப்பிகள்தான் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றனவாகலின் வேண்டுவோர் கூடிய சீக்கிரம் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டியது.

மகாராஸ்ரீப்பன்பிரெஸ் 316 தம்புசெட்டி வீதி சென்னை. } இங்ஙனம், சை. இரத்தினசெட்டியார், சொந்தக்காரர்.

ஓம்
பரப்ரம்மணேநம:

ஆரியஜனபரிபாலினி.

இப்பெயர்வாய்ந்த பத்திரிகை இந்துஜனபூஷணி, ஞானமிர்தம், விகடதூதன, தஞ்சைஜனமித்திரன, ஸ்ரீலோகரஞ்சனி முதலிய பத்திரிகைகளைப்போல டிம்மி இரண்டுபாரங்கொண்டு இந்துக்களின் உபயோகத்திற்காக, 1889ஸு மேமீ முதல் மாசம் இருமுறை புதிதாய்ப் பிரசுரஞ்செய்யப்படும்.

இதில் நமது தேசக்ஷேமம், பொதுஜனநன்மை, ஐக்கியம், ஆரியமதமேன்மை, ஆரியமதத்தைத்தாக்கும புறமதகண்டனம், பாஹியமதங்களில இந்துக்கள் செல்வதைத் தடுத்தல முதலிய விஷயங்கள் எழுதப்படும்; அன்றி சென்னை - இந்துமிராகட் சொஸைட்டி, அதன் கிளைகள் அபிவிருத்தியைப்பற்றியும் பேசப்படும்.

தபாற்சார்சுடன்உள்ளூர்வெளியூர்கையொப்பக்காரர்களுக்கு.

	ரூ.	அ.	பை.
பிரதி 1-க்கு வருஷம் 1-க்கு	0	12	0
இலங்கைக்கு ஷை ஷை	1	2	0
பிரதி 100-க்குத் தபாற்சார்ஜுடன்	1	4	0
தனிப்பத்திரிகைதபாற்கூலியில்லாமல்	0	0	3

இப்பத்திரிகை பரோபகாரத்தைக் கருதியே சொற்ப விலைக்கு விற்கப்படுகின்றது. இதன் முக்கிய கருத்து ஏஜெண்டுகள் மூலமாய் உள்ளூரிலும், வெளியூர்களிலும், ரெயில்ஸ்டேஷன் திருவிழா சந்தைகளிலும், இன்னும் ஜனங்கள் கூடும மற்ற இடங்களிலும் காலணாவீதம் விற்கச்செய்யவேண்டுமென்பதே. இதற்கு ஒவ்வொருவரும் சகாயஞ்செய்தல் வேண்டும். கையொப்பங்கள் விசேஷமாய்ச்சேர்ப்பிப்பதோடு, ஒவ்வொரு ஊர்களிலும பத்திரிகைகளை விற்பதற்குத் தக்க ஏஜெண்டுகளையும் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டியது.

☞ முன்பணமின்றி யாருக்கும் பத்திரிகை அனுப்பப் படமாட்டாது. ☜

☞ 1889ஸு ஏப்ரல்மீ 12உக்குச்சரியானவிரோதிஸு சித்திரைமீ 1உ சுக்கிரவாரம், இரண்டு பக்கங்கொண்ட பத்திரிகை ஒன்று மாதிரிக்கு வெளியாயிற்று. அது வேண்டுவோர், அரை அணா ஸ்டாம்பு முன்பு அனுப்பினால் 10 பத்திரிகைகள் அனுப்பப்படும். பிறகு சந்தா அனுப்பினவர்களுக்கு இவ்வருஷம் மேமீ முதல் அந்தமாதிரி நாலுபக்கங்கொண்ட பத்திரிகை கிரமமாய் வரும்.

இப்பத்திரிகையைக் குறித்து இன்னும் ஏதேனும் அறிய விரும்புவோரும். மணியார்டர் முதலிய அனுப்புவோரும அடியிற் கையொப்பமிட்டவர் பேருக்கே அனுப்புதல்வேண்டும். நட் பேட் கடிதங்கள் வாங்கப்படமாட்டா.

மதராஸ்ரிப்பன் பிரெஸ், 316, தம்புசெட்டிவீதி, சென்னை 1-4 89. } இங்ஙனம், சை. ர. நமசிவாயசெட்டியார், ஷை பத்திரிகையின் மானேஜர்.

Tamil Works by P. Soondaram Pillay M. A.
Professor of Philosophy; College; Trevandrum.

1. An Introduction to Science	0	8	0
2. Tha Indian Hermit: a poem	0	0	6
3. Manoonmanyan; a play.	(in the press		

Apply to the author or to the Manager of the Ripon) Press No. 316. Thamboo Chetty street Madras.

திருவனந்தபுரம் காலேஜ் தர்க்காதி சாஸ்திர பண்டிதர் M. A. சுந்தரம்பிள்ளையால் இயற்றப்பட்ட நூல்கள்.

நூற்றொகைவிளக்கம்.	0	8	0
சிவகாமி சரிதம்.	0	0	6
மனோன்மணீய நாடகம். (அச்சிலிருக்கின்றது)			

விரும்புவோர் மேற்படியாரிடத்திலோ சென்னை ரிப்பன் பிரெஸ் மானேஜரிடத்திலோ அபேக்ஷிக்கவேண்டியது.

ஶ்லோகசதுஷ்டயீவ்யாக்யா.	௦	க	௦
ஶ்ரீமத்ஸ்ருஷ்டிமஜ்ஜுராஷ்ட க- ஶ்ரீராஜாராஜவர்மப்ரணீத: ஶ்ரீவிராடவர்ணாஸ்தவ: ஸவ்யாக்யாநம்.	௦	௦	௬

ஶ்ரீமதப்பய்யதீக்ஷிதேந்த்ரவிரசிதக்ரந்தா:.

ஶ்ரீஶிவார்ணீமணிதீபிகா: ஶிவதத்வவிவேக:.	உ	௦	௦
ஆதித்யஸ்தோத்ரரத்நம் ஆதித்யஸ்தவஸங்க்ரஹம்ச.	௦	கஉ	௦
ப்ரஹ்மதர்கஸ்தவ: ஸவ்யாக்யாநம்ச.	௦	அ	௦
ருசிதத்வோத்தரநாஸம் ஸவ்யாக்யாநம்.	௦	ச	௦
ஶிவபூஜாவதி:. (த்விதீயம்)	௦	க	௦
ஶிவமஹிமகலிகாஸ்துதி: ததுபரி ஶ்ரீமதப்பய்யதீக்ஷிதாசார்யஶ்ரீராஜசூடாமணிதீக்ஷிதவிரசித வ்யாக்யா.	௦	எ	௦
ராமாயணதாத்பர்யஸங்க்ரஹ: ஸவ்யாக்ய:.	௦	உ	௦
பாரததாத்பர்யஸங்க்ரஹ: ஸவ்யாக்ய:.	௦	உ	௦
ஶிக்ஷாஷோடஶஸங்க்ரஹ: (த்விதீயம்)	க	௦	௦
ரத்நத்ரயபரீக்ஷா ஸவ்யாக்யா.	௦	உ	௦
பஞ்சரத்நஸ்துதி: ஸவ்யாக்யா.	௦	க	௦
ஶிவகர்ணாம்ருதம்.	௦	ச	௦

—அந்யகர்த்ருகா: க்ரந்தா:—

ஶ்ரீமந்நீலகண்டதீக்ஷிதப்ரணீத: ஸங்க்ஷேபராமாயணம் ஶ்ரீமத்ஸ்ரீராஜராஜவர்மகவிக்ருதவ்யாக்யாஸஹித:. (நாகரலிபி)	௦	கூ	௦
ஸ்ரீராஜராஜவர்மப்ரணீதம் ஶ்ரீராமசந்த்ரவிஜயம் சம்பூகாவ்யம்	௦	அ	௦
விஶாகநக்ஷத்ரதீபிகா (நாகரலிபி:)	௦	௦	௬
வாயுநீதி:- (நாகரலிபி:)	௦	க	௦
ஶ்ரீக்ருஷ்ணஸாரஸங்க்ஷேபவிக்ருதம்)(ப்ரஶ்நோத்தரநாராயணம்)(	௦	ரு	௦
விடம்பநஸாஹாத்ம்யம்(க்ரந்தலிபி:)	௦	க௦	௦
விடம்பநஸாஹாத்ம்யஸங்க்ரஹம்)(	க	௦	௬

ஸோமஶேகரப்ரயச்சை.

Printed and Published for the Proprietor at the Brahmavidya Press. Chidambaram.